# ஸ்காபறோவில் நவீன வசதிகளுடன் சரவணபவன்

"ஸ்காபுறோவில் சைவ உணவகம் இல்லா குறையை சரவணபவன் நிறைவு செய்யும்" இப்படி சில அன்பர்கள் புதன் மாலை Wood side மோல் அருகே கதைத்துக்கொண்டிருந்தது என் காதுகளில் ரீங்காரமிட்டது. அடே அப்பா இப்படி எத்தனைபேரின் ஏக்கங்களை Wood side மோலில் அமைந்திருக்கும் சரவணபவன் போக்கப்போகிறது என்ற எண்ணத்தோடு புதிதாக திறக்கப்பட்டுள்ள சரவணபவனுக்குள் உள்ளிட்டேன். திறப்பு விழா உள்ளே வாடிக்கையாளர்கள் நிறைந்து விருப்பமான சைவ உணவுவகைகளை ஓடர் கொடுத்து சாப்பிடுவதும் ஒருபுறம், நிறைவேறாமல் இருக்கும் ஒரு சிலவேலைகளை ஊழியர்கள் உற்சாகமாக நிறைவேற்றிக் கொண்டிருந்ததை காணமுடிந்தது. உள்ளே புகுந்ததும் சரவணபவன் உரிமையாளர் திரு பிரதீப்பும் ஊழியர்களும் வரவேற்றனர். முதலில் உணவு பிறகு பேட்டி என்றபடி என்ன ஓகே சாப்பிடுறீங்க என்று பிரதீப் கேட்டார். எனக்கு மசாலா தோசை என்றேன் சில நிமிட நேரங்களில் சுடச்சுட மசாலா தோசை என் மேசைக்கு வந்தது. அமர்ந்து சாப்பிட்டு Mango குளிர்பானமும் அருந்தி முடிந்தது. திறப்பு விழாவுக்கு சரவணபவன் வெளிநாடு உணவுக்கிளைக்கு பொறுப்பானவர் சரவணபவன் உரிமையாளரின் இரண்டாவது மகன் என்று ஒருவரை அறிமுகம் செய்தார். சிரித்த முகத்தோடு என்னைப்பார்த்ததும் ஆ...... எனக்கு ஞாபகம் இருக்கிறது எங்கள் மிஸிஸ்ஸாகா திறப்பு விழாவுக்கு விளம்பரம் போட்ட செந்தாமரை பத்திரிகை என்று ஞாபகப்படுத்திக்கொண்டார். அப்பாடா இப்படி எல்லாவற்றையும் ஞாபகத்தில் இருக்க கூடியவர் நிச்சயம் வியாபாரத்தில் வெற்றிபெறுவார் என்று யாரோ சொன்னது என் ஞாபகத்துக்கு வந்தது.





அனுபவம் பெற்ற என் தந்தை 1981 ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள கே.கே.நகரில் 1981 ஆம் ஆண்டு சரவணபவன் என்ற உணவகத்தை ஆரம்பித்தார். அவரின் உழைப்புக்கு கிடைத்த வெற்றியால் தமிழகத்தில் பலவேறு பிரதான நகரங்களில் 32 கிளைகள் ஏற்படுத்தப்பட்டு தமிழகத்தின் உணவுப்பிரியர்கள் உட்பட உலகெங்குமிருந்து வரும் சைவ உணவுப்பிரியர்களுக்கும் வரப்பிரசாதமாகவுள்ளது. காலத்துக்கு காலம் உணவுத் தயாரிப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி சரவணபவனின் வெற்றிக்கு துணை செய்வதில் ஊழியர்களின் பங்களிப்பு நிறைவே இருப்பதாகக் கூறிப் பெருமைப்பட்டார் திரு.சிவக்குமார். வெளிநாடுகளிலும் சரவணபவனின் கிளைகளை உருவாக்கவேண்டும் என்ற அவா திரு.சிவக்குமாருக்கு ஏற்பட்டதோடு அவர் மத்தியகிழக்கு நாடான டுபாயை தெரிவுசெய்தார். டுபாயில் தொழிலுக்காக சென்றுள்ள இந்தியர்களுக்கு மட்டுமல்ல இலங்கை தமிழர்களுக்கு அது வரப்பிரசாதமாக அமைந்து விட்டது. முதற்கிளையே வெற்றியாக முடிந்தது. திரு.சிவக்குமாரின் சிந்தனையில் மேலும் பல கிளைகளை ஏனைய நாடுகளில் உருவாக்கவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அந்த முயற்சியைதான் தொடர்ந்ததன் விளைவாக இன்று கனடாவில் இரு கிளைகள் திறக்கப்பட்டுவிட்டது. ஒன்று ஏற்கனவே மிஸ்ஸிஸாகா நகரில் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஸ்காபறோவில் Finch & Mc Cowan சந்திக்கு அருகேயுள்ள Wood side திரையரங்கு அருகில் விசாலமான கட்டடத்தில் சரவணபவன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வெளியே அழகான தோற்றம் உள்ளே மோலுக்குள்ளால் வரவும் ஒரு பாதை வெளிப்பாதையாலும் உள்ளே செல்ல முடியும். சரவணபவனில் அமர்ந்து சாப்பிட மூன்று பிரிவுகள் ஒரு அறை பார்ட்டி அறை விருந்து வைப்பவர்களுக்கு ஏற்றபடி அமைப்பு மோலுக்குள்ளால் வருபவர்கள் அமர்ந்து உண்பதற்கு வெளிமண்டபம் பிரதான பாதையால் செல்பவர்கள் உள்ளே நுழைந்ததும் ஒரு மண்டபம்







இப்படி 150 பேர் ஒரே நேரத்தில் அமர்ந்து உண்ணக்கூடிய பிரமாண்டமான அமைப்பு. மின் விளக்குகளின் அழகு அங்கு அமர்ந்து உண்ணும்பொழுது தமிழகத்தின் மண்வாசனை அப்படியே எம்மை இழுக்கிறது என்பது உண்மை. இப்படிப்பட்ட சரவணபவனுக்கு தமிழகத்திலிருந்தே உணவு தயாரிப்பதற்கு என்றே நன்றாக பயிற்சிபெற்ற சமையற்காரர்கள் ஆறுபேர் வருகை தந்துள்ளனர். அவர்களின் கைவண்ணம் இங்கு மட்டுமல்ல பல்வேறு நாடுகளில் சரவணபவனின் வெற்றிக்கு காரணமாகிறது என்றார் திரு.சிவக்குமார். தமிழகத்தில் பெயர் பெற்ற உணவுவகைகளை இவர்கள் தயாரித்து அளிக்கின்றனர். உணவுக்குத் தேவையான சகலவிதமான தேவைகளும் நேரடியாக பெறப்படுகிறது. இவர்களின் சேவைக்கு அங்கிருந்து கிடைக்கும் பொருட்கள் உதவுகின்றன என்றார் திரு.சிவக்குமார். மலேஷியா, சிங்கப்பூர், யூ.எஸ்.ஏ, இங்கிலாந்து என்று 18 கிளைகள் பல்வேறு நாடுகளில் ஏற்படுத்தியுள்ள திரு.சிவக்குமார் அவர்களிடம் நீங்கள் செந்தாமரை மூலம் என்ன கூற விரும்புகிறீர்கள் என்று கேட்டேன். ஸ்காபரோவில் நிறைவே இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் அவர்கள் வரவேண்டும் எங்கள் உணவை உருசிக்க வேண்டும் அவர்களின் ஆதரவும், அன்பும் தான் எங்கள் வெற்றியின் முதற்படி என்றார். நிச்சயம் அவர்கள் வருவார்கள் என்று அருகிலிருந்த என் நண்பர் ஒருவர் சொன்னார். இங்கே அமர்ந்து சாப்பிட்டவர் அடிக்கடி வருவார் அப்படி உணவு உபசாரம் என்றார் அதே நண்பர். சரி நீங்களும் ஒருதடவை போவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. சிறிய நேரத்தில் நிறைவான பேட்டி ஒரு பக்கம் வயிறார உணவு உண்ட மகிழ்ச்சியில் நாம் அங்கிருந்து எங்கள் அன்பைத் தெரிவித்துக்கொண்டு வெளியே வந்தோம் சரியாக இரவு9மணி இருக்கும் அப்பொழுதும் பலர் உணவருந்த இடம் எடுப்பதற்காக காத்திருந்தது எங்கள் கண்ணுக்குப்பட்டது. சரவணபவன் வெற்றிக்கு பலர் உண்டு அதில் நீங்களும் ஒருவர்.

-வினோத்